விபரீதமல்ல, விவேகம்

Phone: No. 4502 Regd; No. M. 5458

விலை முக்காலணு இலங்கை 8 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 15—2—51 | மணி 73

விவேகத்தைவிபரீதமென்று மக்களை ஏமாற்ற முடியாது!

—————o—————

நம் நாட்டைப் பிறர் சுரண்டவிடமாட்டோம்

—————o—————

'வீரகேசரி'க்கும் 'தினமணி'க்கும் உள்ள வேறுபாடு!

இலங்கையில் உள்ள இந்தியர்களில் பெரும்பாலோர் தமிழர், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். அத்தனை பேரும் முதலீடு வைத்து வாணிகம் செய்துபொருள் ஈட்டுபவர்களல்ல! அப்படியிருந்தும்சம்பாதித்த பணத்தை அனுமதியின்றி இந்தியாவுக்கு அனுப்பிவைக்க முடியாது. காரணம் இலங்கை தனி நாடானது தான்! ஆனால் தென்னாட்டை வடநா வாணிகம் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களை நாடோறும் கொள்ளையடித்துச் செல்வதைத் தடுக்க முடியவில்லை. ஏக இந்தியா என்ற பெயரால் சுரண்டப்படுகிறது. இதை நிறுத்த வேண்டுமானால் திராவிடநாடு பிரிந்தால்தான் முடியும் என்பதை கீழே இலங்கையர் எழுதியுள்ளதைப் படித்தாலே புரிந்துகொள்ளலாம்.

இலங்கையில் வாழும் தென்னாட்டவர்களில் பெரும் பகுதியினர் தோட்டத் தொழிலாளர்கள் வியாபார முறையில் பொருள் தேடுபவர்கள் மிகக் குறைவு. அதிலும் பெரும் பொருள் ஈட்டுபவர்கள் ஒரு சிலர் தான் இந்நிலையில், அவர்களுக்குத் தரப்படும் தொல்லைகள் மிகப் பல. இலங்கையில் ஐந்து ஆண்டுகள் வாழ்ந்ததை உறுதிப்படுத்தி தற்காலிக வாசப்பர்மிட் பெறவேண்டும். தாய்நாட்டிற்குச் சென்றால் மூன்று மாதங்களில் திரும்ப வந்துவிடவேண்டும். நூற்றுக்கு 75 பேர்களை இலங்கையர்களாகவே வேலைக்கு வைத்துக் கொள்ளவேண்டும். சில தொழில் முறைகள் இலங்கையர்களுக்கு மட்டுமே உரிமைப்படுத்தப்பட்டிருக்கின்றது. இத்தனை இன்னல்களுக்கிடையே ஈட்டும் பொருள் முழுவதையும் தாய்நாட்டிற்கு அனுப்ப முடியாது. பொருள் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் அனுமதி பெற்று, ஒரு பகுதியை மட்டும் தான் அனுப்பலாம். இந்த முறை கடந்த ஓர் ஆண்டிற்கு முன்னே அமுலுக்கு வந்து, பல ஆயிரக் கணக்கான தென்னாட்டவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்' இதன் பிறகே, தென்னாட்டில் ஏக இந்தியாவின் பேரால் கொள்ளை இடும் வடநாட்டாரை எதிர்த்து மறியல் நடக்கிறது. மக்களுக்கு விளக்கிக் காட்டப்படுகிறது. இதை மறந்து, கல்கி 1950-ம் ஆண்டு டிசம்பர் 3-ம் நாள் இதழில 'ரஜனி' என்பவர். சென்னை "மறியலின் எதிரொலி!" என்ற தலைப்பில், 'விபரீத மறியல்' என வரைந்துள்ளார். நமது பொது மாமத்து இலாகா அமைச்சர் தோழர் பக்தவச்சலம் அவர்களும் ஒருமுறை இதேமாதிரி கூறினா.

தங்களுக்கு எதிரான எண்ணங்கள் மக்களிடையே பரவாமலிருக்கப் பார்த்துக்கொள்வதற்காக இம்மாதிரியெல்லாம் பேசி, எழுதி எதிர்க்கட்சியினரை ஒடுக்கிவிடலா மெனக் கனவு காண்கிறார்கள். இன்று தென்னாட்டில் கொள்ளை இடும் வடவருக்கு ஏதாவது கட்டுப்பாடு உண்டா? என்று மந்திரியாரைக் கேட்கின்றோம். கொழும்பிலே நடத்தும் "வீரகேசரி" செய்தித்தாளின் வருவாய் முழுதையும் செட்டியார் நினைத்தபடி நம் நாட்டிற்கு கொண்டுவந்துவிட முடியுமா? சென்னையிலே நடத்தும் "தினமணி" செய்தித்தாளின் வருவாய் முழுதையும் கோயங்கா வடநாடு கொண்டு செல்ல ஏதாவது தடையுண்டா? ராஜா சர் முத்தய்யா செட்டியாருக்குச் சொந்தமான ஒரு கம்பெனியின் வருவாயை எண்ணியதும் பர்மாவிலிருந்து இங்கு கொண்டுவர முடி

2-ம் பக்கம் பார்க்க

'ஔவைக்கு அவமதிப்பு

மலையாளத் தோழர்கள் போக்கு

டி. கே. எஸ். சகோதரர்கள், திருவிதாங்கூர் நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த சில நண்பர்கள் விருப்பத்திற்கிணங்க தங்கள் நாடகங்களைத் திருவனந்தபுரத்திலும், பிறகு ஆலப்புழையிலும் நடத்தினார்கள் இங்கேதான் மலையாளிகள் தங்கள் மொழிவெறியை வெளிப்படுத்திக் கொண்டனர். இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசியலிலே வேறுபாடு இருக்கலாம். ஆனால் கலைத்துறையிலே மொழி உணர்ச்சியை வெளிப்படுத்திக் கலைக்கு அவமானத்தை உண்டு பண்ணுவது என்பதை எந்த நாட்டாரும், எவரும் சகிக்க முடியாது. அத்துடன் அதை வளரவிடுதலும் மிகக் கொடுமை தரக்கூடியது என்பதை உணர்த்துகிறோம். தமிழ்நாட்டுக் கலைகளை மேல்நாட்டார் எவ்வளவு அன்புடன் வரவேற்று மரியாதை செலுத்துகின்றனர். ரசிக்கின்றனர்.

ஆனால் மலையாளத் தோழர்கள் போல் இதுவரை மேல்நாட்டார் நடந்துகொண்டதாக நாம் அறியவும், கேட்கவுமில்லை. கலை என்பது பொதுச் சொத்து. அதில் வெறுப்புணர்ச்சி ஏற்படுமேயானால் அது அறியாமை என்பதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை.

நாடகத்தை நடக்கவிடாமல் குழப்பம் உண்டுபண்ணிக்கொண்டிருந்தது நம் எதிர்கால கூட்டுப் பொறுப்புணர்ச்சியைப் பாதிக்கக் கூடியதாக இருக்கிறது. அரசியலிலும், பொருளாதாரத்திலும் விடுபட போராடி வருகின்ற நேரத்தில்; இது மாதிரியான சில்லரை விஷமங்கள் நம் முன்னேற்றத்தைத் தடுக்கும் ஓர் முட்டுக்கட்டையாக அமைந்துவிடுமென அஞ்சுகிறோம். இப்படிப்பட்ட விஷமத்தனம் எவர் செய்திருந்தாலும், அல்லது எவர் தூண்டுதலினாலோ நடந்திருக்குமானால் அவர்களுக்கு அறிவிப்பதெல்லாம், இன்றைய நிலையில், நம்முடன் ஐக்கியம் வளர்ந்துவரும் நிலைமையில் இப்படிப்பட்ட விஷமத்தனங்களைக்களைந்தெறிந்து நாம் ஐக்கியத் திராவிடத் தனி ஆட்சி காண முன்வர வேண்டும் என்பதே யாகும்.

———

ரப்பர் மூளை

லண்டன், பிப். 13—

மூளை பாதிக்கப்பட்டிருக்கும்பட்சத்தில் சேதமானதிற்கு பதிலாக ரப்பரைக்கொண்டு மூளை அமைத்து செயற்கை முறையில் மூளை வேலை செய்யும்படி செய்யலாம் என்பது இந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது

எலும்புகளுக்குப் பதில் பிளாஸ்டிக் உருப்புகள் வைத்து ஆப்ரேஷன் செய்வது ஏற்கனவே தெரிந்த விஷயம்.

———

சூயஸ் கால்வாய்மீது பாலம்

கெய்ரோ, பிப். 14—

சூயஸ் கால்வாய்மீது கட்டப்படும் புதுப்பாலத்தின் வேலை ஆரம்பமாகிவிட்டது. இன்னும் 18 மாதங்களில் இது பூர்த்தியாகிவிடும் எனத் தெரிகிறது.

அணுக்குண்டைக் கொண்டே பூகம்பம் எற்படச்செய்யலாம்

————(ஃ)————

பிரபல விஞ்ஞானி தாம்ஸன் கருத்து

லண்டன், பிப். 14—

இரண்டே கால் பவுண்ட் எடையுள்ள ஒரு அணுக்குண்டை பூமிக்குள் வெடிக்கச் செய்வதினால் ஒரு பூகம்பத்தையே ஏற்படுத்தலாம் என்று பிரபல விஞ்ஞானி ஸர். ஜார்ஜ் தாம்ஸன் அபிப்பிராயப் படுகிறார்.

பூமிக்கடியில் வெடிக்கச் செய்வதைவிட பூமியின்மேல் வெடிக்கச் செய்வதில்தான் அதிக சேதம் விளைவிக்கலாம் என்று அவர் கூறுகிறார். ஜலவாயுக்குண்டு உபயோகம் இப்போதைக்கு இருக்கபிரமேயமே இல்லை என்பது அவர் கருத்து.

அணுக்குண்டு வீசுவது ஈவிரக்கமற்றது என்பதைக் கண்டிக்கஇவர். தயாராக இல்லை. ஒரு நியாயமான முடிவை அடைய அவசியமான அளவுக்குமேல் எதிரிக்காகட்டும் அல்லது வேறு யாருக்காகட்டும் கொடுக்கப்படும் கஷ்டங்களைக் கண்டிக்க வேண்டியதே என்று இவர் கூறுகிறார்.

மாலைமணி

சென்னை 5—2—51 வியாழக்கிழமை

மற்றொரு சதி

பஞ்சாலைகள் நெசவாலைகள் எனப்படுபவை, தென்னாட்டில் மிக மிகச சிலதாம இருக்கின்றன. வட நாட்டிலோ, அதிலும முக்கியமாகப் பம்பாய் மாகாணத்திலோ பஞ்சாலை—நெசவாலைகள் ஏராளமாக இருக்கின்றன. வட நாட்டிலிருக்கும ஆலைகளோடு இவற்றை எந்த வகையிலும ஒப்பிட்டுப்பாாக்க முடியாது. மேலும தென்னாட்டு ஆலைகளுட் பல வெறும நூல் மட்டும உறபத்தி செய்யக் கூடியவைகளேயாகும் ஒன்றிரண்டு ஆலைகளே துணி நெசவில் ஈடு படுகின்றன. அதுவும வட நாட்டு ஆலைகள் உறபத்தி செய்வதைப் போன்ற மென்மையான ரகங்கள் இங்கே உறபத்தியாவதில்லை.

இங்ஙனமிருந்தும் தென்னாட்டு ஆலைகள் சரிவர நடைபெறுவதற்கு முடியாமல் திண்டாடிக் கொணடிருககின்றன. தென்னாட்டிலேயே ஆலைகள் மிகுந்த பகுதி கோயமுத்தூர் வட்டாரந்தான். கோயமுததூர்ப பகுதியில் முன்னரே இரணடு ஆலைகள மூடப்பட்டுவிட்டன. இன்னும் மூன்று ஆலைகள் விரைவில மூடப்பட்டு விடும் என்று அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. சில ஆலைகள் மூன்று ஷி டுகளாக வேலை செய்து கொணடிருந்தவை, இப்போது இரண்டே ஷிப்டுகளுடன வேலையை நிறுததிக்கொள்ள வேண்டியதாகிவிட்டது.

இதற்குக் காரணம் என்ன? வழக்கம்போல உள்ளதுதான். பஞ்சு கிடைக்கவில்லை என்பதும, மின்சாரம் போதவில்லை என்பதுமேயாகும். நம நாட்டில் அரசாங்கம் செய்யும தவறுகள் ஒவ்வொன்றுக்குப் சாக்குப் போக்குகள் கூறுவதும், அன்னியன்மீது பழி போடுவது வழக்கமாகிவிட்டது.

வங்காளத்திலும ஒரிசாவிலும் மற்ற அரசாங்கங்கள் சிலவற்றிலும் உணவுத் தானியததைவிட பருத்திக்கே முதலிடம் காட்டிப் பருத்தி விளைச்சலை அதிகப்படுத்தி யிருக்கிறார்கள். அப்படியிருந்தும பருத்தி போதவில்லை. வடநாட்டுப் பஞ்சாலைகளின் பெரும் பசிக்குப் போதிய பருததி உற்பத்தியாகவில்லை எனும காரணத்தால் தென்னாட்டுப் பருத்தியுங்கூட, வட நாட்டுக்குக் கொண்டு போகப் படுகிறது

பொதுவாக, நம் நாட்டில் விளையும் பருத்தி நம் நாட்டு மில்களே பயன் படுத்தக் கூடியவாறு இருக்கவேண்டும அது போதாவிட்டால், அல்லது வேறு ரகப்பருத்திகள் தேவைப்பட்டால் நாம் அவை உற்பத்தியாகும் நாடுகளிலிருந்து வரவழைத்துக்கொள்ள வேண்டும். இப்படி வரவழைத்துக் கொண்டால்தான் நம் ஆலைகள் சரிவர வேலை செய்ய முடியும. ஆலைகள் சரிவர வேலைசெய்தால்தான் ஆயிரக் கணக்கான ஏழைத் தொழிலாளர்கள் வேலை செய்ய முடியும். துணிகளுக்காகவும் நாம் வடநாட்டை எதிர்பார்த்துக்கொண்டிராமல் வாழ முடியும்.

ஆனால், இன்று நடப்பதென்ன? நம் நாட்டுப் பருத்தியும் வடநாடு செல்கின்றது. நம் நாட்டில் உற்பத்தியாகும் நூல்களும் வட நாடு செல்கின்றன, அங்கிருந்து உற்பத்தி செய்யப்பட்ட ஜவுளிகள் இங்கு இறக்குமதி செய்யப்பட்டு நம் நாட்டுப் பணம் சுரண்டப்படுகிறது. அதாவது வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில், நம் நாட்டுப மூலப்பொருள்களையெல்லாம் அவர்கள் கொண்டுபோய், உற்பத்தி செய்த பொருள்களை இங்கனுப்பி வைத்து நம்மைச் சுரண்டியது போன்ற வேலைகளை, இன்று திராவிட நாடு விஷயத்தில் வட நாட்டார் செய்து வருகின்றனர்.

இங்கு உற்பத்தியாகும் பஞ்சு, நூல் முதலியவற்றை நம் தேவைக்கு வைத்துக்கொண்டு மிகுதியாவதைத்தான் எடுத்துக் கொண்டுபோக அனுமதிப்போம் என்று கூறும் துணிவு நம் ஆட்சியாளர்களுக்கு ஏற்படவில்லை.

இந்நிலையில் நம் நாடு முன்னேறுவது எப்படி? வடவர்களுக்கு அடிமைப்பட்டிராமல் உரிமையுடன் வாழுவது எப்படி? இன்றைய ஆட்சியாளர் நம் நாட்டை வடவரின் சந்தைக் கடையாக்கிவருகின்றனர் என்று கூறுவதைத் தவிர வேறென்ன கூறுவது!

மின்சாரம் போதவில்லை என்றால், தண்ணீரை நம்பி மின்சார உற்பத்தி செய்யும் முறையுடன் இயந்திரங்கள் மூலம் உற்பத்தி செய்யவும் முயன்று அதற்கான இயந்திரங்களை வர வழைத்திருக்க வேண்டும். கையில் பணமில்லை யென்றால், அமெரிக்காவிடமிருந்து முன்னர் வாங்கிய பெருந் தொகைக் கடனில், மின்சார உற்பத்தி இயந்திரங்களையும் வரவழைத்து அவற்றைத் தென்னாட்டுக்குக் கொண்டுவரும் வேலையை இந்த நாட்டு ஆட்சியாளர் அப்போதே செய்திருக்க வேண்டும்.

ஆனல், ஒன்றையும் செய்யாமல் சும்மா இருந்துவிட்டு, நம் நாட்டையும் மாற்றார் சுரண்டவிட்டு, நம் நாட்டு ஆலைகளை மூடிவிடக் கூடிய நிலையில் விட்டுவிடுவது பெரிதும் கண்டிக்கத்தக்க விஷயமாகும்.

நம் நாட்டைச் சுரண்டுவதொன்றையே கருத்தில் வைத்து, நம் நாட்டு ஆலைகளுக்கு வேண்டிய பருத்தியை விநியோகம் செய்யாமல், நம்மிட மிருக்கும் நூலையும் வாங்கிக்கொண்டு போய்விட முயலும் வட நாட்டுடனும் நாம் இணைந்திருக்க வேண்டுமென்பது நமக்கு நாமே அடிமைத்தனத்தைத் தேடிக் கொள்வதைப் போன்றில்லையா?

மேலும் நம் நாட்டில் உற்பத்தியாகும் நூல்கள் வட நாட்டுக்குச் செல்லவும், அதைக் கண்டித்துக் கிளர்ச்சி செய்தால், நம் நாட்டு ஆலைகளுக்குப் பருத்தியே கிடைக்காத சூழ் நிலையை உண்டுபண்ணி, அவை மூடப்படவும், இதன் பயனாக, கைத்தறி நெசவாளர்கள் மட்டுமின்றி ஆலை நெசவாளர்களும் ஆயிரக் கணக்கானவர்கள் வேலையின்றி அல்லலுறுமாறு செய்யப்படுவது; மத்திய அரசாங்கம் நம் நாட்டை எல்லா வகையாலும் குன்றவைக்கச் சூழ்ச்சி செய்கிறது. சதி செய்கிறதுஎன்று கூறுவது தவறாகுமோ? பொது மக்கள் இதனைச் சதி யென்று கருதாமல் வேறு என்னவென்று கருதுவர்?

விபரீதமல்ல...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுமா? திருச்சிக்குப் பக்கத்தில் தன் பேரால் ஒரு ஊரையே உண்டாக்கி சிமிண்ட் உற்பத்தி செய்துபொருள் திரட்டும் டால்மியா வடநாட்டுக்கு (தன் நாட்டுக்கு) பொருள் கொண்டு செல்லத் தடை ஏதாவதுண்டா? பிறநாட்டை நாம் சுரண்டவும் வேண்டாம் (இனி சுரண்ட விடமாட்டார்கள்) நம்நாட்டை பிறர் சுரண்டவும் விடவேண்டாம். இதை தானே "திராவிடர்" இயக்கம் கூறுகிறது. "பர்மா, மலேயா நாடுகளில் உள்ள தங்கள் மூலதானத்தை தாய் நாட்டிற்கு கொண்டு வந்து தொழில் அபிவிருத்தி செய்ய வேண்டுமெண்று" அண்மையில் உமையாள்புரத்தில் காகிதமில் ஒன்றைத் திறந்து வைக்கையில் ராஜா சர் முத்தையா செட்டியார் கூறினார். இதை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். இதற்கு அமைச்சர் வழிவகுத்துத் தரட்டும்

இலங்கையை வளப்படுத்திய பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ வழிசெய்ய ஒரு நல்ல மொழி தெரிந்த தமிழரை தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டும். ஹைகமிஷனர் பதவிக்கு ஒரு தமிழரை வேண்டுமென இலங்கை தற்காலிக வாசிகள் சங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. கீழே தந்துள்ளோம்.

இதற்கெல்லாம் மத்திய அரசியலாரிடம் மண்டியிட்டுக் கெஞ்சிக் கேட்கவேண்டிய நிலையில் உள்ள மந்திரியார் மக்களிடத்தில் "திராவிடர்" இயக்கத்தைக்காட்டி தப்பமுடியாது பாாப்பனீயம் எங்கெங்கெல்லாம் வேலை செய்கிறதென்பதை நாம் மட்டுமல்ல, மக்களும் நன்கு அறிந்திருக்கின்றார்கள். விவேகத்தை-விபரீதமென்று கூறி மக்களை ஏமாற்ற முடியாது மக்கள் கண் மாலைக்கண்ணல்ல, மூளை நத்தைப்பூச்சியல்ல வென்பதை "ரஜனி" போன்றவர்கள் உணர வேண்டும்.

ஹைகமிஷனர் பதவி

இலங்கையிலுள்ள இந்தியர்களில் பெரும்பாலோர் தமிழர்கள் அவர்களுடைய பிரச்னைகளை அவர்களோடு ஒரு தமிழர் அளவளாவித் தெரிந்து கொள்ளுவதைப்போல மற்றவர்கள் தெரிந்துகொள்ள முடியாது ஆகையால் ஹைகமிஷனர் பதவியிலிருந்து டிசம்பர் 2 ம் தேதி விலகிக்கொள்ளும் தோழர் வி. வி. கிரிக்கு அடுத்தபடியாக நியமிக்கும் புதிய ஹைகமிஷனர் ஒரு தமிழராயிருக்க வேண்டுமென்று இந்திய சர்க்கார் வெளிநாட்டிலாகா வைக் கேட்டுக்கொள்கிறது.

சைனா-ரஷ்யாவுடன் உணவு ஒப்பந்தம் செய்துகொள்க

—

சென்னை, பிப். 12—

கடந்த 9-2-51 இரவு 8 மணிக்கு மயிலை தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் தோழர் மயிலைநாதன் தலைமையில் நடைபெற்ற[illegible] இவ்வாண்டிற்குக் கழக நிர்வாகத்திற்குச் செயலாளர், பொன். கு. கோதண்டபாணி; துணைச் செயலாளர்; பா. சீனிவாசன்; விளம்பர உறுப்பினர் மயிலைநாதன்; பொருட்காப்பாளர் செல்வராசு தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் நால்வரை செயற்குழுவிற்கு கோவாப்ட் செய்துகொள்ள செயலாளருக்கு அனுமதியளிக்கப்பட்டது. அ[illegible] மயம் "நாட்டின் உணவுப் பிரச்னை குறித்து இந்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை திருப்தியளிக்கக்கூடியதாயில்லை உணவுப் பஞ்சத்தை நீக்கும் பொருட்டு சோவியத் ரஷ்யா கொடுகக முன் வந்த கோதுமையையும், சைனா கொடுக்க முன்வந்த அரிசியின் முழுப்பங்கையும் ஏற்றுக்கொள்ள தயக்கங்காட்டுவது இந்திய சர்க்காரின் பிற்போக்குத்தனமான கொள்கையை நிதர்சனமாக்குகிறது. நாளுக்கு நாள் பட்டினிச்சாவு பெருத்துக்கொண்டுபோவதை மனதிலிறுத்தி ரஷ்யாவுடனும், சைனாவுடனும் உணவுச் சம்பந்தமான ஒப்பந்தங்களை உடனே செய்து கொள்ள இந்திய சர்க்காரை மயிலை தி. மு. க. வின் இப்பொது உறுப்பினர் கூட்டம் வற்புறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது" பிறகு நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

குறிப்பு:—கழகத்தின் தற்காலிக அலுவலகம் நெ. 50, முண்டகண்ணி அம்மன் கோவில் தெரு, மயிலாப்பூர்.